(All Rights Reserved)

Our Popular Song Hits!

Suryakumari

IN

VIPRANARAYANA

C. A. 1129 & 1130

K. Aswathama

IN

CHINTAMANI

C. A. 1095, 1096 & 1125

M. K. Thyagaraja Bagavathar

IN

CHINTAMANI

C. A. 1126

M. K. Ratha & T. A Sundarambal

IN

ORPHAN GIRL

C. A. 1138 & 1140

SKANDA LEELA

C. A. 1141 to 1143

SARASWATHI STORES

MADRAS.

RATNAVALI

The filmatised version of "Ratnavali" is an adaptation from the Tamil Play of Rao Bahadur P. Sambanda Mudaliar who, in his turn based his story upon the Sanskrit drama by Sri Harsha.

One fine evening, King Vatsa of Kausambi was having a stroll on the seashore. The Queen Vasavadatta, a daughter of the king of Ceylon, was having a game of flower balls n the company of her maids. Inspired by the majestic glory of the sunset, the King was singing, while Vasantaka, the Vidhushaka, was by his side. The attention of the fishermen who were engaged in dragging their nets ashore, was suddenly drawn to a floating object at a distance. They at once rush to the spot and find to their astonishment that it was the body of a young woman of ravishing beauty in an unconscious state, clinging to a plank, the relique of a shattered bark. The body was immediately brought ashore. The King's clowns, Babaravya and Damaravya, standing by, run to the Queen and inform her of the precious find. The Queen arrives and is captivated by her beauty and orders her immediate removal to the place for medical attention, lest the sensual king should see her and love her. The Queen christened her as Sagarika (Ocean Maid) and provided her with a maid of gentle disposition, Susangada, by name.

Sagarika regains consciousness in due course and is surprised to find herself in a palace. On looking around she sees the portrait of King Vatsa. To love is human! Sagarika immediately, enshrines him in her heart. At a later Stage she comes to know that he was none other than her own cousin's husband. A Pathivratha loves only once and so is Sagarika. And for obvious reasons, she does not reveal her identity.

The King gets the news that a beautiful damsel was living in the palace but will the timid King ask Vasavadatta about it? But Vasantaka the Vidhushaka, starts the game. The love sick Sagarika in her turn is getting more anxious day by day to feast her eyes with the sight of the King.

It was Spring Time in Kausambi !—A Season when the God of Love has his diary full of engagement—and the appropriate time for the Worship of Manmatha. The town of Kausambi presents a gala spectacle. The royal couple visit the temple to offer worship. The shrewd Queen so arranges that Sagarika does not attend the worship. But to the poor Sagarika this was a sad blow to all her fond hopes of having a look at the idol of her heart.

Sagarika to give vent to her pent up passion sits in the garden bower and paints the King's portrait. While she was immersed in this pleasure, Susangada enters the bower, sees the portrait and understands Sagarika's feelings and immediately paints Sagarika's figure by the side of the King's. Sagarika was now in eternal bliss. Just then the two court fools are seen running in their direction chased by a monkey. Sagarika and Susangada also follow suit and in their fright leave the paint board behind.

Whose visit would be more opportune to this particular spot than that of Vatsa? Vatsa and Vasantaka come on the scene. The King sees in portrait form the realisation of his dream. At the instance of Vasantaka and Susangada, a meeting of the two lovers is arranged and both set their seal of love. The enjoyment is made short lived by the sudden arrival of the Queen on the spot. She takes hold of the paint-board and finding the figure of Sagarika by the side of the King, asks the King for an explanation. The King could not explain and Vasavadatta, with struggling indignation in every gesture, leaves the place. Not satisfied with any of the explanations given by the accomplices the Queen orders Sagarika and Vasantaka to be confined in two separate rooms and puts Damaravya and Babaravya on guard. The clever Vasantaka, taking advantage of the idiocy of these two fools, escapes from the room and with the King's help, sets Sagarika free and, in turn, puts Babaravya and Damravaya in the rooms. The Queen comes with the King to the prison and finds that not only have the two prisoners escaped, but also the paintings on the board erased and ugly figures substituted by the fools. Thus humiliated and defeated in her object, Vasavadatta leaves the place in disgust.

All the Same, Vatsa's passion to meet Sagarika was growing like wild fire. Vasantaka arranges for a meeting of the King and Sagarika in the garden. Sagarika is to come disguised as the Queen to evade detection and meet Vatsa at an appointed place in the garden. Kanchanamala, the termagant adviser of the Queen who hated Sagarika as her rival, comes to know of the arrangement and reports it to the Queen,

The King is ready at the place of arrangement in time. Not knowing that Vasavadatta, had taken Sagarika's place he makes love to her and speaks endearing words, The Queen waits until the King has finished, and then lets the King know who she is. Look at the screen and you will know how superbly Saraswathi Bai has acted the part of the enraged Queen. The jealous Vasavadatta leaves the place in disgust.

The disappointed Sagarika learns what has happened and unable to bear all these humiliations, determines that death by suicide is her only refuge. While Sagarika was tying round her neck some fibres of a creeper to terminate her miserable existence, Vasantaka passing by, notices it and raises an alarm that the Queen was trying to end her hated being. The King is there in a moment. He saw Sagarika in queen's dress and takes her to be Vasavadatta. He runs to her and assures her that he would thereafter love Vasavadatta alone and heals her mental wounds by fresh dose of love. But the fine weather is once again spoilt by a sudden squall—the appearance of Vasavadatta on the scene. She finds Vatsa and Sagarika together enjoying heavenly bliss. The infuriated Queen drags Sagarika away to the palace and puts her in prison again, To Sagarika, this kind of treatment at the hands of the Queen and the interception of her love of the King at every stage, were too much to bear and it began to tell upon her health. Emaciated with care, she was getting shattered day by day. The Queen who could not realise what her ailment was arranges for medical aid.

Vasantaka makes capital of this opportunity. Vatsa and Vasantaka hatch a plot to get into Sagarika's cell and then walk out of prison together. Wait and see on the screen how Vatsa and Sagarika walk out of the room in disguise and how at the last moment when Sagarika was feeling exultant, the queen steps in, and lifts Sagarika's disguise.

What is Vasavadatta's state of mind now? A queen she might be; still, she has the heart of a woman. She realises that Sagarika was a thorn on her side and that the only way by which she can have the undivided love of the King, is to get rid of Sagarika. Your heart will throb if you see on the screen how she carries out her object In a desparate mood Sagarika makes a fervent appeal to the Almighty God who incarnated ten times to rid the world of wickedness and to establish virtue. P. S. Ratna Bai's (Sagarika's) song in Raga-malika in praise of God is a masterpiece in the whole story and this song would haunt the memory.

Does the queen know whose life she is trying to put an end to? Mysterious are the ways of Providence. It was destined that Sagarika should live. Vasubhuti, the Minister of Simhala, comes to Kausambi in search of Ratnavali. He tells the story of Ratnavali's disappearance and he accidentally notices Ratnavali's ring on Vatsa's finger. How did it come there? Vatsa tells him how he got it. The shrewd queen who was standing by hears the story puts two and two together, rightly guesses that Sagarika whom she wanted to wipe out of existence was her own cousin—RATNANALI. The jealous and suspicious queen now becomes a different woman. See on the screen, how she acts the part of a loving cousin and saves Sagarika (Ratnavali) from the hungry flames! Did Vasavadatta stop with that? Look at the silver screen how the story ends!

BYE-STORY.

It is a very interesting story interwoven with the main plot. Babaravyan and Damaravyan are two Court fools, toc good for the world. One great ambition in their lives was that they should have loving wives. Unluckily for them in this wide world full of women, no one came forward to marry them. Else, they also would have had a similar romantic experience like Vatsa. All their experiences in the plot can better be seen than described. The most interesting scene in the story is their visit to the Dancing girl's house. Their attempts to transform their malformations in their physical body to win the love of the Dasi, will make you laugh, laugh and laugh.

MANGALAM.

Await the release of

The Songhits of this Picture

ON

ODEON RECORDS

"ரத்னாவளி"

ராவ்பகதூர் P. சம்மந்த முதலியார் எழுதிய நாடகத்தை தழுவியது.

பாட்டு எழுதியவர்—ஸங்கீத வித்வான் பாபநாசம் சிவன்

முக்கிய நடிகர்கள்.

வாஸவதத்தை	...	P. S. ஸரஸ்வதிபாய்
ரத்னாவளி (ஸாகரிகை)	...	P. S. ரத்னாபாய்
காஞ்சனமாலை	...	T. R. A. மதுரம்.
சுசங்கதை	...	T. N. மீனாக்ஷி.
வத்ஸராஜன்	...	மஹாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தி.
வஸந்தகன்	...	C. பஞ்சு.
வசுபூதி	...	A. T. கிருஷ்ண சர்மா
பாபரவ்யன்	...	C. S. சாமண்ணா.
டாமரவ்யன்	...	M. R. சுப்ரமணிய முதலியார்.

ஹாஸ்ய நடிகர்கள்.

L. நாராயண ராவ்.	—	K. S. அங்கமுத்து.
T. M. ஷேக்தாவுத்.	—	M. P. மீனாம்பாள்.
பபூன் T. M. ஷண்முகம்.	—	J. சுசிலாதேவி.

M. S. முத்துகிருஷ்ணன்.

சேம்படவர்கள், சேவகர்கள், தோழிகள், முதலியோர்.

"ரத்னவளி"

தமிழ் பேசும் படமாக வந்திருக்கிற 'ரத்னவளி' கதை ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார் எழுதிய தமிழ் நாடகத்தைத் தழுவியது. இதை முதல் முதலில் ஸம்ஸ்கிருதத்தில் நாடக ரூபமாக எழுதியவர் ஸ்ரீ ஹர்ஷா. நிற்க, பிலிம்கதைக்குப் போவோம்.

திருமடந்தை பூமாதும் பொருந்தும் மருங்கும்
அரவரசன் அணைசேர் அமல விமல
அமரபரிபால தேவாதிதேவ வாசுதேவ
ஜயஜய தயை நிதிவைகுண்ட வாஸேச்வரனே
மதன ஜனக எமைக் கருணை செய்து
திருவருள்புரிகவே மங்களந்தருகவே. (திரு)

கடற்கரையில் கதை ஆரம்பமாகின்றது. அந்தி வேளை. அலைகள் பொங்கி யெழுந்து கரையில் தாவி வந்து மோதுகின்றன. மணல் மிசை ஜனங்கள் பாடிக் களிப்புற்றிருக்கின்றனர். அரசன் 'வத்ஸன்' தன் தோழனுடன் உட்கார்ந்து கொண்டு உல்லாசமாய் பாடிக்கொண்டிருக்கிறான்.

வத்ஸன் :—

ராகம்-சுத்தசாவேரி—தாளம்-ஆதி.

கடலுக்குவமை கடலே
கடவுளின் அற்புதசக்தியை காட்டுமிக் (கட)

இடையறாத ஓங்கார நாதமுடன்
எங்கும் பரந்தகாத—கங்கு கரையிலாத (கட)

கீதமதியைக் கண்டு சந்தோஷம்—கொண்டு
செம்படவர் மீன்பிடிக்கும் கோஷம்—இளங்
காதருல்லாஸமொடு லாவுங்கரையும்
குளிர்ந்த காற்றுடனே
நீர் திவலை தூவுந்திரை மோதும் விரி. (கட)

மற்றொரு புறம் ராணியும் தோழிகளும் பூச்செண்டு ஆடுகின்றனர். செம்படவர்கள் பாடிய வண்ணம் வலைகளைப் போட்டு மீன் பிடிக்கின்றனர்.

செம்படவர்கள் :—

கூடிவாங்கடா—இங்கே கூடிவாங்கடா
நேரமாவுதே அண்ணமாரே (கூடி)

வாடிக்கை காரங்ககூடி
நம்பளே 'ஆ'ன்னு பாக்கரா
பெண்டாட்டி பிள்ளே பசியால்
ஏங்கி பாக்கரா (கூடி)

அந்திபட்டுப்போச்சு கடையிலே கள்ளுமாயிடும்
கையிலே துட்டுங் கிட்டலே
இண்ணேக்கு இங்கணே ஆச்சுடா (கூடி)

எண்ணவோ ரொம்ப பளுவாய் இருக்குது
வந்து கொஞ்சம் சேந்து பிடிச்சு இசுங்கடா (கூடி)

"அதோ பாருங்கள்!". என்கிறுன், ஒரு செம்படவன் திடீரென்று. அவன் சுட்டிக் காட்டுவது கடலில் ஒரு மரக்கட்டையின்மேல் மிதந்து வரும் ஒரு மனித சரீரம். அடுத்த நிமிஷமே செம்படவர் சிலர் பாய்ந்து நீந்தி ஸ்மரணேயற்ற ஒரு பெண்ணின் சரீரத்தைக் கரையில் கொண்டு சேர்க்கின்றனர்.

பாபரவ்யனும் டாமரவ்யனும் இச்செய்தியை மகாராணிக்கும் அரசனுக்கும் அறிவிக்க ஓடுகின்றனர். ராணி விரைந்து வந்து பெண்ணேப் பார்க்கின்ருள். ஸ்மரணேயில்லேயே தவிர உயிர் இருக்கிறது என்று தெரிகின்றது. அரசன் அங்கு வருமுன் பெண் அரண்மனேக்குத் தூக்கிச் செல்லப்பட்டு சிகிச்சையும் ஆரம்பமாகிறது. ஸமுத்திரத்தி விருந்து கண்டெடுக்கப் பட்டவளானதால் அவளுக்கு ஸாகரிகை (ஸமுத்ரப் பெண்) என்று ராணி நாமகரணம் செய்கிருள்.

அரசன் 'வத்ஸன்' சிற்றின்பப் பிரியன். ஆனல் தனது ராணியிடம் உள்ளூரப் பயங்கொண்டவன். புருஷனின் குறையை உணர்ந்தவளாதலால், அரசன் கண்ணில் காட்டாது அவ்வழகிய பெண்ணே மறைத்து வைக்கும்படி அரண்மனேக்கு அனுப்பிவிட்டு, ராணி அரசன் வந்தவுடன் பரிஹஸித்து விளேயாடி ஆடிப் பாடுகிருள்.

வத்ஸன் :—

ஆருயிர் நாயகி விளேயாடுதல் தகுமா
நேரமும் பரிகாசமா
வீண்பழி சொல்வதும் ஆகுமா.

வாஸவதத்தை :—

ப்ராணநாதனே ஏமாந்ததே போதுமே
தேடி வந்ததை இழந்தீர்—நீர்
பொய்ச்சாகஸந்தனே விடும்

வத்ஸன் :—

வானுயர் சோலையும் செவ்வானமும் மாலையும்
வேர்வையும் மனச்சோர்வையும்
தணித்தொரு இன்பமே தோயுதே

நாளடைவில் பெண் 'ஸாகரிகை' குணப்படுகின்ருள். 'ஸுஸங்கதை' அவளது தோழி. ஒரு நாள் ஸாகரிகை அரசனது படத்தைக் கண்டு, அவனது அழகில் மோகங்கொண்டு, அவன்பால் காதல் கொள்கிருள். பிறகுதான் அவளுக்குத் தெரியவருகிறது, வத்ஸன் தன் ஒன்றுவிட்ட சகோதரியின் புருஷன் என்று. இருந்தபோதிலும் தானும் அவனையே மணப்பதாகத் தீர்மானிக்கின்ருள். பீறியெழுங் காதலின் சக்தியை யாரே தடுப்பது? ஸாகரிகையின் குலங் கோத்திரம் ஒருவருக்கும் இன்னும் தெரியவில்லை.

அரசன், தான் வந்து பார்க்குமுன்பே கடலில் மிதந்து வந்த ஒரு பெண்ணை அரண்மனைக்குக் கொண்டு போய் விட்டார்களே என்ற துக்கத்திலும், அழகே வடிவெடுத்து வந்த பெண் அவள் என்று கேட்டும் அவளைக் காணவும் இயலவில்லையே என்ற ஏக்கத்திலும் வருந்துகிருன். ஆசை அவனைப் பிடித்து உந்துகின்றது. அப்பெண்ணரசியைக் காண ராணியிடத்தில் அவனுக்கு இருக்கும் பயம் அவனைப் பின்னே இழுக்கின்றது. பெண்ணைப்பற்றித் தன் மனைவியிடம் பேச்செடுக்கவும் அவனுக்குத் துணிவு இல்லை. ஸாகரிகையின் வரலாற்றை விசாரித்து வருமாறு தனது தோழன் வஸந்தகனை அனுப்புகிருன். வஸந்தகன் பாபரவ்யன் மூலம் ஸாகரிகையைப் பற்றித் தெரிந்து கொள்கிருன்.

பாபரவ்யன் ஒரு பெரிய கோமாளி. இந்த வேஷத்தில்தான் சி. எஸ். சாமண்ணு கதையில் வருகிருர். கோமாளியாக நடிப்பது சிரம சாத்தியமான காரியம் இக்கதையில் வரும் கோமாளி, தான் கேட்கும் புதுப் புதுப் பதங்களைப் பனையோலையில் உடனுக்குடனே எழுதிக் கொள்வதும், சதா சர்வ காலமும் அந்தச் சுவடியுங் கையுமாகத் திரிவதும், தின்பண்டத்தில் தனக்கிருக்கும் தீவிர அபிமானத்தைப் பட்டவர்த்தனமாகக் காட்டுவதும், கலியாணம் செய்து கொள்ள அவன் ஏங்கி நிற்பதும், ஆனல் பெண்ணும் பிறந்த ஒரு பிராணியும் அவனது கரத்தைத் தொட முன் வராததும் இவையாவும் ஹாஸ்யத்திற்கு நன்கு இடந்தரக் கூடியவை. பாபரவ்யனின் இணைபிரியா சகோதரன் டாமரவ்யன். இந்த டாமரவ்யன் வேஷத்தை M. R. சுப்ரமண்யன் இந்த பாத்ரத்துக்கு அனுஸரணையாக நன்ருக நடித்திருக்கிருர். பகவானல் இவருக்குக் கொடுக்கப்பட்ட சரீர அமைப்பு இந்த பாத்ரத்தை நடிக்கவென்றே சிருஷ்டித்தாரோ என்று அனுமானிக்கும்படி ஏற்படுகிறது. ஸ்ரீராமனுக்கு ஒரு லக்ஷ்மணனைப்போல் பாபரவ்யனுக்கு அவன் தம்பி டாமரவ்யன். இளையோன் பிரம்மாண்டமான தொந்தியுடையவன். "இவ்வளவு பெரிய தொந்தியுடைய நான் ஒரு மந்திரி பதவிக்கு லாயக்கில்லையா?" என உண்மையாக எண்ணு

பவன். இவவிரு ஹாஸ்ய நடிகர்களும் கதையில் அடிக்கடி கடைசி வரை வருகின்றனர்.

வஸந்தகன், பாபரவ்யன் இவ்விருவர் மூலம் ஸாகரிகையின் இருப்பிடத்தை அரசன் அறிகிறான். அவளைப் பார்க்கத் தவிக்கின்றான். சந்தர்ப்பம்தான் வாய்க்கவில்லை. ஸாகரிகையோ, வத்ஸன்படும் அவஸ்தை தெரியாதவளாய் தன் தோழிகளுடன் வேடிக்கையாகப் பாடிக்கொண்டு காலத்தை போக்குகிறாள்.

ஸாகரிகை :—

தெம்மாங்கு—தாளம்-திச்ர ஏகம்.

மின்னுதே மேல் முருகு தன்னானனா
மினுதே பல் கவி தில்லே லேலெலலோ
தூரமடி சொக்க நாடு தன்னானனா
திரும்பி வழி நடந்து போவோம் தில்லே லேலெலலோ
ஏத்தமடி கோட்டமலே தன்னானனா
இரக்கமடி தேவிகுளம் தில்லே லேலெலலோ

வஸந்தோத்ஸவம் அரண்மனையில் தடபுடல் படுகின்றது. உத்ஸவ காலத்தில் அரண்மனையில் ஸங்கீத கச்சேரி நடைபெறுகிறது. ஸாகரிகைபாடுகிறாள்.

ஸாகரிகை :—

ராகம்-கல்யாணி—தாளம்-ஆதி.

பல்லவி.

ராமா இது தர்மமா—யான்

அனுபல்லவி.

காமதியாற்றுன்புறலாமா—வர்மமா ரகு (ராமா)

சரணம்.

காமாரிதுதிசெய் திவ்யநாமா தசவதன
பீமா நிர்ஜிதபூர்ண ஸோமனனா பட்டாபி (ராமா)
கௌசல்யாகுமார—அஹல்யா சாபோத்தார
கல்யாண தாவஸித்ய—கல்யாண ரகுவர
வாஸவன் பணி அயோத்யா
வாஸ பத்ராத்ரிராம
தாஸர்க்கருள் செய் ராமதாஸன் பணியும் ஜெய (ராமா)

மகாராணியும் தோழிகளும் அலங்காரஞ் செய்துகொண்டு மன்மதனது கோயிலுக்குப் போகையில் வேடிக்கையாக பாடிக்கொண்டே போகிறார்கள்.

தோழிகள் :—

ஆடும் கலாப மயில் இசை
பாடும் சல்லாபக் குயில் கயன்ருேடும்
மதுவருந்தி குருதி கூடும் மதுகரங்கள் (ஆடும்)

மாரன் மலரம் புடையான் வெகு சூரன்
நாண் சுரும்படையான்
வீரன் வில் கரும்புடையான் வெற்றி
மீனக்கொடையுடையான் (ஆடும்)

யோகம் கலைந்தரனும் உமை மோகம்
கொள்ளவாளி எய்வான்
தேகம் அழிந்தும் தளர் விலாத்
தீரன் ரதிமெய் காதலன் (ஆடும்)

சிங்கார பூங்காவனம் நல்ல
ஸங்கீதம் ஸாயந்தனம் அலங்காரப்
பளிங்கின் தலம் ஓரி
எங்காதலர் கோலாகலம் (ஆடும்)

அரசனும் அங்கு வரப்போவதாக ராணி அறிகின்ருள். மன்மதன் கோயிலில் ராணியும் அவள் பரிவாரங்களும் இந்த பாட்டை பாடி பூஜை செய்கிருர்கள்.

தோழிகள் :—

மகிழ்ந்திடுவோம்—பாங்கிகாள்
மகிழ்ந்திடுவோம் ரதியுடன் மதனையும்
துதித்துப்புகழ்ந்திடுவோம் பாங்கிகாள்
தேவரில் மூவரினும் யாவரினும் மேவு புகழ்
கோமகனும் பாங்கிகாள்
காமன் மஹோத்ஸவம் யாவர்க்கும் பொதுவே
காதலர் தாம் பிரியாது செய்வதுவே
கன்னியர் மங்கையருடன் நன்னெறியும் மனதில்
கருதுவது நிறைவு பெறுவதுறுதி (மகிழ்)

தன் புருஷனது கண்ணில் ஸாகரிகை பட்டு விடுவாளோ என்ற பயம் உண்டாகிறது. உடனே ஏதோ சாக்குச் சொல்லி அவளை அங்கிருந்து அனுப்பி விடுகின்ருள். ஸாகரிகை மனமுடைந்து, சற்றுத் தூரம் சென்று, புஷ்பக்கொடிகளின் பின்னே மறைந்து நின்று, அரசனது வரவை ஆவலுடன் எதிர் பார்க்கின்ருள். அரசனும் வருகிருன். மலர்ந்தவொரு புஷ்பத்தை அவனது பாதத்தில் படும்படி எறிந்து விட்டு ஸாகரிகை பாட்டு பாடிக்கொண்டு அங்கிருந்து போய்விடுகிருள்.

ஸாகரிகை:—

ஒப்புயர்வில்லாத சுகுமாரன்
உளமதில் வளரும் ஒய்யாரன் இவரே
இப்போ கண்டேன் என் கண்ணுர (ஒப்)

சிந்தைதீர இவரையும் நானே
தெரிசனம் செய்யும் பாக்யமிலேனே
இந்தமலரை அடிகளில் தானே
இன்பமாய் சூட்டுவேன் நானே (ஒப்)

அரசன் புஷ்பத்தை எடுக்கிருன். அதில் ஓர் அலாதி மணம் வீசுகிறது. அது எங்கிருந்து எப்படித் தன்னைத் தேடி வந்தடைந்தது என்பது மட்டும் அவனுக்கு விளங்கவில்லை.

அரசன்பால் ஸாகரிகைக்கு காதல் வளர்ந்துகொண்டே வருகின்றது. சதா அவனது தியானமே.

ஸாகரிகை:—

ராகம்-இந்துஸ்தான் பீலு—தாளம்-திர்த்.

மோகன சுந்தரனே—கண்கவர்
மூர்த்தி மனோஹரனே (மோ)

பூரணசந்திரனே—பூத்த கமலந்தானே
புன்சிரிப்புள்ளமுகமும் (மோ)

காதளவோடிய கருவிழிமதன—சரம்
காந்தம் நிகர் அங்கசிங்காரம்
தராதலத்திலும் வானிலும் உவமை
சொல்லத்தக்கோர்யார் மெய்க்காதல்
நான்கொண்டது தகும் தானே (மோ)

தன் மனக்கண் முன் தன்னையே நின்று நோக்கும் அவனது சுந்தர உருவத்தை அழகு வடிய வரைகின்ருள். இதைக் கண்ட அவள் தோழி ஸுஸங்கதை, அரசனது உருவத்தின் பக்கத்தில் ஸாகரிகையின் உருவத்தையும் எழுதி விடுகின்ருள். எழுதி ஸாகரிகையுடைய மன நிலையை வினவ ஸாகரிகை.

ஸாகரிகை:—

நான்—என்ன பகர்வது என்றன் தோழி
உள்ளம் உருகுதே
நான் காதல்மிகுந்தேன்—இதை
யாரிடம் சொல்வேன்
ஈசனருள் கிடைக்குமோடி—நான்
செய்தவம் பலிதமாமோடி
என் நாதனிடம் யார் என் காதலுரைப்பார் (நான்)

அப்பொழுது பாபரவ்யனும் டாமரவ்யனும் அந்தப் பக்கம் உலாவி வருகின்றனர். அங்கு ஒரு பெரிய குரங்கு வருவதைக்கண்டு அலறிப் புடைத்துக்கொண்டு கூச்சலிடுகின்றனர். கூச்சலைக் கேட்டுப் பயந்து ஸாகரிகையும் ஸுஸங்கதையும் தாங்கள் வரைந்த உருவப் படத்தையும் போட்டுவிட்டு அங்கிருந்து ஓட்டமெடுக்கின்றனர். அதே சமயத்தில் அங்கு விச்ராந்திக்காகத் தன் தோழனுடன் வந்த வத்ஸன் அந்த உருவப் படத்தைக் காண்கிறான்.

வத்ஸன் :—

ராகம்-பாகேஸ்வரி—தாளம்-ஆதி.

பூமிதன்னில் ஒரு ஜோதி பூவையுண்டோ யாரோ இவள்
பூமன் தன்கை வன்மைகாண—பொற்பாவை
செய்தேவினனே.
புண்ணிய மென்செயதேனே—கண்ணுலிக்
கன்னியைக் காண.
விண்ணோர்க்கும் அறியாளிவள்
என்னையும் விரும்புவாளோ. (பூமி)

ராகம்-தோடி—விருத்தம்.

மறையாத மின்னலிதோ—வரையாத ஓவியமோ
குறையாத வெண்மதியோ—குவியாத பங்கஜமோ
சிறையான வெள்ளமிதோ—சுவையாத தெள்ளமுதோ
மறையோன் படைத்ததுவோ—வடிவோ இதென்கனவோ.

அழகு ஊறும் அப்பெண்ணின் உருவம் அவனை மயக்குகின்றது. சில நிமிஷத்திற்கெல்லாம் ஸுஸங்கதை அரசனிடம் வந்து படத்தைக் கேட்கிறாள். ஸாகரிகையும் அங்கே பக்கத்தில்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்து படத்தைத் தன் தோழனிடம் கொடுத்து விட்டு அரசன் ஸாகரிகையைக் காணப்போகிறான். காணுமுன் காதல் கொண்டவருக்குக் கண்டதும் கேட்பானேன்!

வத்ஸன் :—

ராகம்-ஹிந்துஸ்தான் காபி—தாளம்-ஆதி.

பெண்மணி எனதாசை சிங்காரி
பேடனமே திருநேர் சுகுமாரி
தேனே உனை யானே காதலிக்கிறேனே
தேடக்கிடையாத என் மடமானே.

வத்ஸன் :—

ப்ரியசிங்கார லாவண்ய தருண யுவதியே
ரூப-சுந்தரவதியா—இந்த உலகினில் ரதியே.

ஸாகரிகை :—

உமைந் தரிசனஞ் செய்தேன்—எனக்குரிய
புண்ணியனே—புகழ்மிகுந்த கண்ணியனே
தரணிபுரக்கும் அரசே சரஸ குணசரணியனே

வத்ஸன் :—

உயர் சௌந்தர்யம் பொங்கும் விளைநில
மெனும் சிறந்த—மங்கை பருவமு மடைந்த
அரிய தெய்வ மடந்தையே

ஸாகரிகை :—

தடவரை மார்பா—மதன் சுடுசரம் பாய்ந்து
என் மனம் சுடுவதை ஆய்ந்து—தடுத்தலுமது
கடமை, விரகமடக்க அறிகிலேன்

வத்ஸன் :—

மிகுஸரஸ ஸுகுண தருணி—அம்ருதமது
ரஸவாணி—கரிகுழல்வேணி—உனைப்
பிரியேன் கல்யாணி

ஸாகரிகை :—

உமை மருவுவதே—எனது பிறவிப்பயனிதே
பெரும்பரம பதமிதே—இமைப்பொழுதுமை
பிரிதல் நரகத்துயரினும் பெரிதே

இச்சமயத்தில் ராணி தன் தோழியுடன் அதே இடத்திற்கு வருகிறுள். மனைவியைக் கண்டதும் அரசனுக்கு நடுக்கம் எடுக்கிறது. ஏதோ பசப்பி அவளைச் சமாதானம் செய்கிறுன்.

வத்ஸன் :—

வீணே நீ வாது செய்வது தகாது மானே
விடுவாய் சந்தேகம்—தவறுகும் உந்தன் ஊகம்
நீயாக வீண் கலவரம்—கொள்ளலாமோ சஞ்சலம்
திண்ணம் மாதர் நாட்டம்—நான்
மனங் கொள்ள மாட்டேன்

வாஸவதத்தை :—

மனதிலென்ன நாட்டம்—முகமென்ன வாட்டம்
எனது முகம் பாரும்—மௌனமிது போரும்

வத்ஸன் :—

மௌனமேது மில்லே—மயங்கினேன் உன் மொழியால்
உத்யான மிதை சுற்றி—உலாவுவோமே சற்று

வாஸவதத்தை :—

அதோ பாரும் புருஜோடி—அருமையாய் கூடி
கலந்து விளையாடி—களிக்கு துள்ளம் நாடி

ஆனல் உருவப்படமும் கையுமாக அங்கு வஸந்தகன் வந்து குதிக்கிருன். அதைக் கண்டதும் ராணிக்கு கோபமும் துயரமும் பொங்கி வருகின்றன.

வாஸவதத்தை :—

ராகம்-அடாணு—தாளம்-ரூபகம்.

கொஞ்சிக்குலாவவும் வேண்டாம்—என்னை
நெஞ்சில் அளவில்லா—வஞ்சகம் கொண்டு நீர் (கொ)

பட்டப்பகலே இருட்டென்கிறீர்—அகப்
பட்டு விழிக்கிறீர் குப்புற வீழ்ந்தும் மண்
ஒட்டவில்லே என்றன் மீசையிலென்கிறீர்
எட்டி நில்லும் என்னை முட்டாளெனச்செய்து (கொ)

தன் விடுதிக்கு விரைந்து செல்கிருள். சென்று ஸாகரிகையை கூப்பிட்டு அவளை நயமாய்.

வாஸவதத்தை :—

ராகம்-மோகனம்—தாளம்-ஆதி.

உனக்கொரு கணவனைத் தேடி மணம் புரிய
உறுதி கொண்டேனென் தோழி நானே (உன)

ஸாகரிகை :—

எனக்கு அதற்குள் மணம் எதற்கு வீணே நீர்
என்னைப் பரிஹாசம் செய்யாதீர்
மனம் ஒரு நிலையிலில்லே

வாஸவதத்தை :—

இருக்கட்டும் இந்தப் படத்திலிருக்கும் புருஷரை
எங்கேனும் கண்டதுண்டோ

ஸாகரிகை :—

ஒருக்காலும் கண்டதில்லை ஒருவடிவம்
சொக்கம் தனிலுண்டோ இதுபோல்—என்னை
மன்னித்திடுவீரம்மா

ஸாகரிகை :—

ராகம்-கரஹரப்ரியா—விருத்தம்.

கருத்திலென்ன நினைத்தெனை இந்த கடுகடுப்
புடன் வினவுகின்றீரோ
பொருத்த மன்றுமை அடுத்தவன் மற்றோர்
புகலிலேன் ஒரு பேதையானன்றோ
உரைப்பதற்கு ஒரு செய்தியுமில்லை
ஊமைகண்ட கனவதுபோல்
இருக்கும் என்னை நீர்பலபலபேசி என்
இவ்வாறெல்லாம் சோதனை செய்வீர்.

ஸாகரிகையிடமிருந்தும் வஸந்தகனிடமிருந்தும் உண்மையை அறிய ராணி எவ்வளவு முயன்றும் ஒன்றும் பலிக்கவில்லை. இருவரையும் இரண்டு அறைகளில் அடைத்து, பாபரவ்யனையும் டாமரவ்யனையும் காவல்வைத்து விட்டு, அரசனைக் காணப் போகிருள். டாமரவ்யனின் கண்ணில் அவ்வுருவப்படம் தென்படுகிறது. அவனும் ஒரு கோமாளி தானே! படத்திலிருந்த இரு உருவங்களையும் அழித்துவிட்டு வேறு இரு கோர உருவங்களை வரைகிருன். பிறகு கோமாளி சகோதரர் களுக்குள் மந்திரிப் பதவிக்கு யார் லாயக்கு என்ற சர்ச்சை நடக்கின் றது. 'ராஜமாளிகையைச் சுற்றி எவன் முன்னுல் ஓடி வருகிருனே அவனே லாயக்கு' என்று வஸந்தகன் தீர்ப்புக் கூறுகிருன். இருவரும் ஓடுகின்றனர். உடனே அறையினின்றும் வஸந்தகன் வெளியேறி அரசனை அங்கு காண்கிருன். ஸாகரிகையும் அறையினின்றும் வெளி யேறுகிருள். கோமாளிகள் இருவரும் திரும்புகின்றனர். அவர்களை அந்த இரண்டு அறைகளிலும் தாளிட்டு விட்டு வஸந்தகன் ஓடி விடு வதும், ராணி அங்கு வந்து தன் புருஷனைக் கோபித்துக் கொண்டு அவனைச் சந்தேகிப்பதும், 'நீங்கள் இந்த பெண்ணுடன் பேசிக் குலாவ வில்லையா!' என்று சொல்லிக்கொண்டே அரசனை ஸாக ரிகையின் அறைக்கு அழைத்துக் கொண்டு போவதும், ஆனுல் அங்கு ஸாகரிகை இல்லாது பாபரவ்யன் இருப்பதைக் கண்டு ஏமாற்றம் அடைவதும் 'அதுபோகட்டும், இந்தப்படத்திற்கு என்ன சமாதானம் சொல்கிறீர்கள்?' என்று அவள் அரசனைக் கேட்கும்போது படத்தில் வேறு கோர உருவங்கள் காணப்படுவதும், இவையெல்லாம் தமா ஷான கட்டங்களே.

ராணி 'வாஸவதத்தை' அரசனது நடவடிக்கைகளைக் கவனிக்கிருள். வத்ஸன் தன் தோழனது உதவியால் ஸாகரிகையைத் தோட்டத்தில்

தனியிடத்தே காண ஏற்பாடு செய்கின்ருன். அவள் ராணிமாதிரியே வேஷந்தரித்து வரவேண்டு மென்பது ஏற்பாடு. இச்சூழ்ச்சி ராணிக்குத் தெரிந்து விடுகிறது. குறிப்பிட்ட நாளில் அந்த நேரத்தில் அதே இடத்தில் அவளே போய் நிற்கின்ருள். வெண்ணிலா வீசுகின்றது. அரசன் ஆவலுடன் வருகிருன். ராணியைங் கண்டதும் ஸாகரிகை என்றெண்ணி கெஞ்சிக் குலாவுகிருன்.

வத்ஸன் :—

கண்மணி சாகரிகா சுந்தரியே என்
கண்கவரும் லாவண்ய ரதியே—சுகுமாரியே
புவன மனோஹர வதன நாரிமணி
நவமோஹனங்கி சுதனி ஓரமணி (கண்)
உனக்கு நீயே நிகர் எந்தன் தாகந்தணியே
எனக்கொரு முத்தம் தருவாய் இங்கு வருவாய் (கண்)

தன்னையுமறந்து அவன் அப்பொழுது பிதற்றும் வார்த்தைகளைச் சிறிது நேரங் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, ராணி தன் உண்மை ஸ்வரூபத்தைக் காட்டி கடுங்கோபம் கொள்கிருள்.

வாஸவதத்தை :—

ராகம்-தோடி—தாளம்—ஆதி.

போம் போமய்யா யாரிடத்தில்
பொய்யும் புரட்டும் புதுமனிதனே போதும் நீர் (போம்)
சிரித்து மயக்கி பல்லை இளித்துப் பொய்யை மறைத்துச்
சிறுக்கிகள் கலவிக்குக் கிறுக்குப்பிடித்தவரே (போம்)
வரவா புது மாப்பிள்ளையாகிறீர்
வாய் ஓயாமலே கள்ளம் பேசுறீர்
அருமையாச்சு என்னுடன் சல்லாபம்—அரண்மனை
சேடியுடன் சரஸ சல்லாபம் (போம்)

வத்ஸன் அவளைச் சமாதானப் படுத்தி இனித்தான் ஒழுங்காக நடப்பதாக வாக்குறுதி கூறுகிருன். ராணி கோபந் தணியாது அரண்மனைக்குப் போய் விடுகிருள். இதை யெல்லாம் மறைந்து கேட்டுக்கொண்டிருந்த ஸாகரிகை, இனித் தனக்கு வழியில்லை, அரசனது காதலை இனிப் பெற முடியாது என எண்ணி, ஏங்கி

ஸாகரிகை :—

இறைவா கதி நீயே எனையாள்
அருள்வாயே முறையோ துயர் தீராய்
துணை வேறறியேனே
கனவோ மனக்கொள் காதல்
நாயகனைப் பெற்றிலேன் காதல்
பயனிலை இன்பமே சாதல்

தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்து மரத்தினின்றும் தொங்கிக் கொண்டிருந்த கொடியால் தன் கழுத்தில் சுருக்கிட்டுக் கொள்கி ருள். அச்சமயம் அங்கு உலாவவந்த வஸந்தகன் ராணியின் வேஷந் தரித்திருந்த ஸாகரிகையை ராணியே என்று எண்ணி அவள் சுருக் கிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு கலங்கிக் கூச்சலிடுகிருன். கூச் சலைக் கேட்டு அரசன் ஓடி வந்து சுருக்கை அவிழ்த்து, ஸாகரிகை யைத் தனது ராணி யென எண்ணி, இனித்தான் ஸாகரிகையின் முகத்தில் விழிப்பதில்லை யென்றும், தன்னை மன்னிக்கவேணு மென் றும் மன்ருடுகிருன்.

ஸாகரிகை :—

ராகம்-ஷண்முகப்ரியா—விருத்தம்.

கனத்தாலும் எழில் மிகு யெளவனத்தாலும்
அனங்கன் நிகர் காவல் வேந்தே
மனத்தாலும் நினைப்பதற்கு தகுதியிலாச்
சாகரிகை மறைந்தொழிந்தால்
நினைத்தாலும் சுகம்பெறுவீர்—உமது கழல்
மறவாத ஏழை உம்மை
நினைத்தே இப்பாழுடலை விடத் துணிந்தேன்
இதைத் தடுக்க நீரேன் வந்தீர்

இதுவும் சங்கடமாக முடிகின்றது. எதிரிலிருப்பவள் ஸாகரிகைதான் என்று தெரிந்ததும், இனித்தான் எப்போதும் ஸாரிகையிடமே உண்மைக் காதல் கொண்டு நடப்பதாகச் சத்தியம் செய்கிருன். காதலர் இருவரும் கைகோர்த்து வெண்ணிலாவில் தனியிடத்தே பேசி உலாவி வரப்போகின்றனர்.

ஸாகரிகை :—

விரும்பேன் விரும்பேன் என் உயிர் வாழ்வு விரும்பேன்
சுரபதிலோகமும் உம்மைப் பிரிந்தால் எல்லா இன்பமும்
வேம்பே

வத்ஸன் :—

காதலின் அம்ருதம் பாரினில் உண்டோ
கண்மணி உன்பால் அதனியும் கண்டேன்
காதலின் உண்மை ஈருடல் தோன்றும்

வத்ஸன் & ஸாகரிகை :—

கண்முன் பிராணன் ஒன்ருகும் (விரும்பேன்)

இதே சமயத்தில் கோபம் சமனமடைந்த ராணி தன் புருஷனைச் சமா தானப்படுத்த அங்கு வருகிருள். உலகத்தையே மறந்து ஆனந்தமாக வருகிற தன் புருஷனையும் ஸாகரிகையும் பார்த்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போடுகின்றது. காதலர்கள் ஸ்தம்பித்து விடுகின்றனர். ஸாகரிகை உடனே காவலில் வைக்கப்படுகின்ருள். அவளது மன

ஏக்கம் சரீரசுகத்தையும் பீடித்து, நாளுக்கு நாள் அவள் தேகம் ஒடுங்கி, வருந்துகிருள்.

ஸாகரிகை:—

நின்சோதனே யானினி தாளேனே
நீதிதானே தயாநிதியே
ஓயுதாவி ஓர்கரை காணேன்
பராபரா ஓ உடன் கருணை புரி (நின்)

நிஜபிராணபதி அரசே
மாதவம் செய்திலேனே உமை அடையவே
மற்ருெரு ஜென்மமே கொள்வேன் செல்லேன் (நின்)

அநேக வைத்தியர்கள் அவளேக் குணப்படுத்த வந்துபோய்க் கொண்டிருக்கின்றனர். காதல் நோயைத் தீர்க்க காதலன் ஒருவனுல் தானே முடியும்!

வஸந்தகனது சூழ்ச்சியால் அரசன் பெண் வேடந்தரித்து ஸ்திரீ வைத்தியராக ஸாகரிகைக்குச் சிகிச்சை செய்யப் போகிருன். அரசன் அவளிடம் உண்மையைக் கூறி அவளே விடுவிக்க ஏற்பாடு செய்கின்ருன். வஸந்தகனும் ஒரு பெண் வேடந்தரித்து அரசனுடன் போகிருன். ஸாகரிகையின் அறைக்குக் காவலாயிருந்த டாமரவ்யனும் அவன் சகோதரனும் ஸ்திரீ உருவத்திலிருந்த வஸந்தகனிடம் காதல் கொள்கின்றனர். 'ஸாகரிகையின் அறையின் சாவியுடன் வெளி வாசலில் காத்திருந்தால்' தான் கலியாணம் செய்து கொள்வதாக வஸந்தகன் கூறவே டாமரவ்யனும் ஒப்புக்கொண்டு குறித்த நேரத்தில் சாவியும் கையுமாக வெளியே காத்திருக்கிருன். அவனிடமிருந்து சாவியை வாங்கிக்கொண்டு வஸந்தகன் "நீங்கள் இருவரும் வெளியே சென்று உங்களில் யாரை நான் விவாகம் செய்து கொள்வது என்பதை நீங்களே தீர்மானித்துக்கொண்டு வாருங்கள்" என்று சொல்லி அவர்களே அனுப்பி விட்டு அரசனிடம் சாவியைத் தருகின்ருன், அரசன் ஸாகரிகைக்குப் புருஷ ஆடை அணிவித்து, இருவருமாகச் சந்தோஷத்துடன் வெளியே வருகின்றனர். இத்தருணத்தில் வாசலில் டாமரவ்யன் சுற்றுவதைத் தோழி மூலம் ராணி அறிந்து சந்தேகங் கொண்டு ஸாகரிகையின். அறையை நோக்கி செல்லும்போது, தன் புருஷன் ஸ்திரீவேஷத்துடன் வருவதைக் கண்டு கொள்கிருள். சற்றுப் பின்னுல் ஸாகரிகை ஆண் வேஷத்துடன், குதூகலமாய் வரும்போது ராணி அவளே பிடித்து நிறுத்தி, அவளது புருஷ ஆடையை நீக்கவே ஸாகரிகையின் மனக்கோட்டையில் இடி வீழ்ந்தது. "இனி இப்பெண் உயிருடனிருந்தால் நமக்கு வாழ்வில்லை" என ராணி நினைத்து ஊருக்கு வெளியே ஒரு பாழடைந்த கட்டிடத்தில் ஸாகரிகையை அடைத்துக் கட்டிடத்துடன் தீமூட்டி அவளே விண்ணுலகுக்கேற்றுவதற்குத் தீர்மானித்து விட்டாள். அரசன் தன் ராணியிடம் ஆசைவார்த்தைகளால் மழுப்புகிருன்.

வத்ஸன் :—

என தன்புமிகும் குணசுந்தரி உன்—அவ
நம்புதல் தீருதல் என்று கொலோ
துன்புறுதே மனம் நீ விபரீத
நினைவிடாயெனில் என்ன செய்வேன் (என)

வாஸவதத்தை :—

உமை நம்புவதாவது போதுமய்யா—நய
வஞ்சக வார்த்தை விடுங்களய்யா
வீண் வம்பிதுவாகும் மருந்து தரும்—ஒரு
பெண்ணுரு நன்கு பொருந்தி இருந்தது

வத்ஸன் :—

(சங்கராபரணம்)

சீர்பூத்த மங்கை சிரோமணி—செவ்விதழ் செம்பவழம்
நீர்பூத்த தாமரை நேர்முக காதலி நீ இருக்க

(ஸஹானு)

பார்பூத்த மற்றொரு பாவையை என்மனம் பாவிக்குமோ
கார்பூத்த நீள்விழி கண்ணே நின்னுள்ளம் கலங்குவதேன்

புருஷனிடம் அளவிலா ப்ரேமை கொண்ட ராணி, அரசனை மட்டும் மன்னித்துவிடுகிறாள்.

ஸாகரிகை தீயில் மாளப்போகிற நாள் இது. 'ஸிம்ஹள' நாட்டு மந்திரி 'வஸுபூதி' அரண்மனைக்கு இன்றே வந்திருக்கிறான். அரசனுடன் அவன் பேசிக் கொண்டிருக்கும்போது அரசன் கைவிரலிலிருந்த மோதிரத்தைக் கண்டதும் வஸுபூதி திடுக்கிட்டுப் போகிறான். அது ரத்னவளியின் மோதிரம்! அது எப்படி அரசன் கையில் வந்ததென்று கேட்கின்றான். அவர்களது சம்பாஷணையிலிருந்து, ஸிம்ஹள நாட்டு ராஜகுமாரியான ரத்னவளியும் அவள் தோழிகளும் படகில் விளையாடிக் கொண்டிருக்கும்போது ஒரு புயற்காற்று வீசி, படகு கவிழ்ந்து, அவர்களில் ஒருவர் கூட மீளவில்லை என்ற விஷயம் புலப்படுகின்றது. நாலா திசைகளிலும் தூதர்கள் அனுப்பப்படுகின்றனர். அவர்களில் ஒருவனே வஸுபூதியென்றும், ரத்னவளியைத் தேடுவதற்காகவே அவன் இப்போது இங்கு 'கௌசாம்பி' நகரத்திற்கு வந்திருப்பதாயும் தெரிய வருகிறது. இதை யெல்லாம் பின்னிருந்து கேட்டுக் கொண்டிருந்த ராணிக்கு உடனே சகலமும் தெளிவாகிறது. ஸாகரிகை தனது ஒன்று விட்ட சகோதரியான ரத்னவளியே யென்று அறிகிறாள். அரசனும் தான் அணிந்திருக்கும் மோதிரம் ஸாகரிகை தந்தது எனக் கூறுகிறான். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே ஸாகரிகை காவலிலிருக்கும் கட்டிடம் தீ மூட்டப்படுகிறது. தீயினின்றும் சகோதரியைத் தன் கையினுலேயே காப்பாற்ற, ராணி வாஸவதத்தை குதிரையின் மேலேறி வாயு வேக மனோவேகமாகப் பறந்து செல்கிறாள்.

கட்டிடத்தில் தீ பரவுகிறது. ஸாகரிகை தவிக்கின்ருள். தீ பரவப் பரவ அதினின்றும் உயிர் தப்பப் பகீரதப் பிரயத்னம் செய்கிருள். ஒரு வழியும் காணும் ஸாகரிகை தனக்கு தீயில் மரணம் ஏற்படுவது நிச்சயம் என்றுணர்ந்து லோகஸம்ரக்ஷணார்த்த தசாவதாரமெடுத்த பகவானை துதிக்கிருள்.

ஸாகரிகை :—

ராகமாலிகை—விருத்தம்.

பிலஹரி.

மதலைகளுருக்கொண்ட சதுர்மறைகளைத்
தாங்கும் மத்ஸாவதாரன் நீயே
அதிரிலாக் கடல் முழுகும் அவனி முதுகி
னிலேந்தும் ஆதி கூர்மாவதாரா

தேவகாந்தாரி.

எதிர் இரணியாக்ஷனைக் கொன்று
பூதேவியை ரக்ஷித்த பன்றியுருவே
மதியிலா இரணியன் மார்பைப்பிளந்து
பிரஹலாதனும் வர்னவர்களும் வாழ
நரசிம்மமாய் தூணில் அவதாரஞ் செய்த
வைகுண்ட வாசஹரியே

தன்யாசி.

வாமனனுருக்கொண்டு மாபலியெனும்
யானை மதமொழிய உலகளந்தோய்
மட்டற்ற துர்க்குண க்ஷத்ரிய பூண்டொழிய
வருசண்ட பரசு பாணி

ஆனந்த பைரவி.

துட்டராவணன் முதல் அரக்கரை வதைத்
துலகுதொழ வந்த ராமசந்திரா

நீலாம்பரி.

ரோகிணி குமாரா—கலப்பையும் உலக்கையுங் கைக்
கொண்ட பலராமனே
தேவகிபாலா கோபால கம்ஸாதிகுலகாலா கிருஷ்ணாவ
தாரா

பூபாளம்.

தீனஜன மந்தார ஏழையை வந்தாள
ஏனோ பராமுகமய்யா
ஏதுகதி நீயலது மாதவ தயாபரனே
ஏழையுன் அடைக்கலமே

திடீரெனக் கட்டிடம் வெடித்து, ஸாகரிகை பிரக்ஞையற்றுக் கீழே விழுகின்றாள். இக்கணத்தில் ராணி வாஸவத்தையும் குதிரையினின்றும் குதித்திறங்கி, தீயிலும் புகையிலும் புகுந்துச்சென்று, தன் சகோதரியை வாரி அணைத்துக்கொண்டு வெளியே வந்து, அரண்மனையை அடைகின்றாள். நாளடைவில் ஸாகரிகை குணமடைந்ததும் தான் ரத்னவளி என்ற விஷயம் இனி ரகசியம் இல்லை என்பதை அறிகிறாள். சமயம் அறிந்து தன் விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய் வாஸவதத்தைக்கு ஸாகரிகை சொல்லுகிறாள்.

ஸாகரிகை :—

ராகம்-ஹம்ஸாநந்தி—தாளம்-ஆதி.

என்ன சொல்வேன் என்றன் சோதரியே பேதமை தன்னை
மன்னித்து அன்புடன் ஆதரியே
கன்னிமாடத்திலிருந்து—சின்னமதியில் கடல்
காணக்கருதி—யாவரிடமு முறையேன்
மடமை பெருகி ஒருதினம்
தோழியர் சூழக்கப்பலேறி—வேடிக்கையாகச்
சுற்றிவருவோமென்று கூறி—வரும் வழியில்
ஆழிமத்தியில் கப்பல் ஊழிக்காற்றாலுடைந்து
அமிழ்ந்து விட்டது தெய்வ
அருளின் அலையில் அகதி தனியே உயிருடன்
இக்கரையில் ஒதுக்கப்பட்டேன்—மூர்ச்சை தெளிந்தி
ருக்கும் அறையில் ஓர் சுவற்றில்—
உள்ளங்கவர்ந்த இக்காம சுந்தரனைச்
சொக்கும் படத்தில் கண்டு மெய்காதல்
கொண்டேன் பின்பே
விவரம் முழுதும் வினவி அறிய நரபதி
அக்காள் கணவனென்றறிந்தேன்
வெளியிற் சொல்ல வெட்கங் கொண்டு
மறைத்து வந்தேன்
திக்கற்ற என்னை நாட இருதலைக்கொள்ளி எறும்
பதுவென நெஞ்சம் அஞ்சி
விதியை நினைத்து உயிரை வெறுத்து தவித்ததை. (என்)

ராணியும் தாராள மனங்கொண்டு ரத்னவளியை அரசன் வத்ஸன் மணந்து கொள்ள மனப்பூர்வமாக அனுமதி தருகின்றாள்.

வாஸவதத்தை :—

என்னிலும் மிகுந்த பிரேமையுடன் இவளோடன்பு
கொள்ளுவீர்

வத்ஸன் :—

என்னருமைத் தேவி சந்தோஷமோடு கொள்ளுவேன்

ஸாகரிகை :—

என்னுளந்தன்னில் பொங்கும்—மகிழ்வெவ்வித முறை செய்வேன்.

எல்லோரும் :—

மன்னும் ஜகதீசன் அருளாகும் இதுவே
பொங்கும் மங்கள மெங்கும் நிறைந்
தோங்கி இன்பம் தங்குக.

கதைக்குள் ஓர் உபகதை.

வாடாத புஷ்பமாலையில் பட்டுச் சரடு ஓடுவதுபோல் ரத்னவளியின் கதையில் பாபரவ்யன் டாமரவ்யனின் உபசரிதை ஓடுகின்றது. இவ்விருவரும் கதையில் மிகப் பிரதானமாக விளங்குகின்றனர். கதையின் நகைச்சுவை ஆரம்பமுதல் இறுதிவரை குன்றாதிருப்பதற்குக் காரணம் இந்த விசித்திரச் சகோதரர்கள்தான்.

வத்ஸராஜனின் அரசாங்கத்தில் தாங்கள் இருவரும் மிகப் பிரதான புருஷர்கள் என்று பாபரவ்யனும் டாமரவ்யனும் மனப் பூர்த்தியாக எண்ணுகின்றனர். அவர்களின் வாழ்க்கையின் லக்ஷியம் இரண்டு, கலியாணம் செய்து கொள்வது முதலாவது. ஆனால் பாவம்! ஒரு பெண்ணும் இவர்களை விரும்பி முன் வருவதில்லை. இரண்டாவது, ராஜ்ய பரிபாலன விஷயத்தில் முக்கியமான ஸ்தானம் வகிக்க அவர்களது ஆசை இவ்வளவு அவ்வளவு அன்று!

இந்த இணைபிரியாச் சகோதரர்கள் எதிரில் நின்றால் போதும். பார்ப்பவர்களுக்குச் சிரிப்பும் சந்தோஷமும் பொங்கி வரும். அவர்களது கோமாளிப் பேச்சும் அவர்களது பைத்தியக்கார நடத்தையும், அவர்களின் விசித்திர மனப்போக்கும் சகலமும் அடங்காச் சிரிப்புக்கு இடந்தரும். கன்னத்தில் யாராவது ஓர் அடி கொடுக்கட்டுமே! அடுத்த நிமிஷத்தில் அதை அவர்கள் மறந்துவிடுவர். "ஏன்! இவ்வளவு சாம்பிராணிகளாய் இருக்கின்றீர்கள்!" என்று யாராவது கேட்கட்டுமே! அது அவர்கள் காதிலே விழாது.

வஸந்தோத்ஸவ தினத்தன்று பாபரவ்யனும் டாமரவ்யனும் வீதியில் போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்த சமயம் ஒரு நடனமாது மாமா இருவரும் ஒரு மாம்பழக்காரியிடம் மாம்பழம் விலை பேசிக்கொண்டிருக்கையில், அம்மாது பழத்தின் அருமையை பாட்டு ரூபமாக பாடிக்கொண்டிருக்கிறாள் அப்பாட்டைக் கேட்டு அவ்விடம் பாபரவ்யனும் டாமரவ்யனும் வருகிறார்கள்.

மாம்பழக்காரி:—

மாம்பழம் வாங்குவீரே—இதை
மகிழ்வாய் புசிப்பீரே—இது
மனங்கவர்ந்திடும் மல்கோவா—இதன்
மதுரமதை இன்னும் சொல்லவா—சரஸ
மணவாளனோடருந்தும் அல்வா—இந்த
கௌசாம்பி சோலையிலுதிர்ந்த
மதன பூஜைக்கான தல்வா (மாம்)

விலை அதிக மென்றே நினைக்காதீர்—என்
தங்கத்தைப் பார்த்து மலைக்காதீர்—கனி
அதி விரைவினில் விற்பனையாகிடும்
அப்புறம் ஏமாந்து விழிக்காதீர் (மாம்)

பிறகு' அந்த தாஸியை பின் தொடர்ந்து இருவரும் அவள் வீட்டிற்கு செல்லுகிறார்கள். நாட்டியகச்சேரி நடக்கிறது. அதில் கலந்து கொண்டு உத்ஸாஹத்துடன் இவர்களும் ஆடிப்பாடுகிறார்கள்.

மாமா, பாபரவ்யன் & டாமரவ்யன்:—

ராகம்-வஸந்தா—தாளம்-ஆதி.

மோகம் கொண்டேனே மடமானே
உன்மீது நானே தேனே (மோகம்)

ஸா நீ தாமா காரிஸ—ஸ ஸகாமா தாநி
தாநி ஸாரி தநிஸாரி ஸாநிதம
காம தா நிஸரி ஸ நீதாம கம (மோகம்)

தக திமிஜநு தகதிமி கிட
தளுங்கு தகம் ததிகணதோம்
ததிகணதோம் ததிகணதோம். (மோகம்)

பாபரவ்யன் :—

ததிகணதோம்.

டாமரவ்யன் :—

ததிகணதோம்.

மாமா :—

ததிகணதோம் (மோகம்)

கச்சேரி முடிந்து எல்லோரும் போனபின்பும், இவ்விருவருக்கும் சபலம் தட்டுகிறது. அவ்விடத்தைவிட்டு போக மனம் வரவில்லை. தட்டுத்தடுமாறி அவளது அந்தரங்க அறையில் போய் விழுவதும், அங்கு திரைக்குப்பின் மறைந்து கொள்வதும் இவர்கள் இருப்பது தெரியாமல் நாட்டியப் பெண் தன் காதலனுடன் குலாவும்போது, அதை மறைவிலிருந்து இவர்கள் பார்த்து வியந்து தாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கட்டி யணைத்து முத்தமிட்டுக் கொள்வதும், இதைக் கேட்டுத் திடுக்கடைந்த நாட்டியப் பெண்ணின் காதலன் அவர்களைக் கைபிடியாகப் பிடித்து நன்கு புடைத்து அனுப்புவதும், ஆனால் அவர்கள் அடியை மறந்து, ஆசையை மட்டும் மறவாதிருப்பதும், இவையாவும் எப்பேர்பட்டவர்களையும் வயிர்புண்ணாகும்படி சிரிக்கச் செய்யும்.

இதோடு நிற்கவில்லை, மாமா வருகிறார். பணமும் கையுமாக வந்தால் ஏற்பாடு செய்வதாக சொல்லுகிறார். மறுநாள் இருவரும் பணத்துடன் வருகின்றனர். ஏற்பாடு ஆகின்றது. "உன் மூக்கு ரொம்ப நீளமாயிருக்கே" என்று மாது அசேஷபிக்கிறாள் பாபரவ்யனிடம் "தொந்தி ரொம்ப பெரிசேயப்பா" என்கிறாள் டாமரவ்யனிடம். உடனே ஒருவன் மூக்கைக் குறைக்க மரத்தில் தேய்க்கின்றான், மற்றொருவன், தொந்திவாட, "தண்டால்" எடுக்கிறான். இருவரும் சேர்ந்து தேகாப்பியாசம் செய்வது ரொம்ப ஜோர்!

ஒரு தாவியின் வீட்டில் ஒரு குட்டி கலகம். அதை இவர்கள் இருவரும் காண்கின்றனர். உடனே அங்கிருந்து பிடி ஓட்டம்! அதன் பிறகு அரண்மனைத் தோட்டத்தைவிட்டு இரண்டு பேர்வழிகளும் வெளியே கால் வைப்பதில்லை. ஆரம்ப முதல், இறுதி வரையில் நாம் இவ்விரண்டு சகோதரர்களையும் கண்டு களிக்கின்றோம். இருவரும் சந்தோஷப் பிருகிருதிகள். சதா ஹாஸ்யமும், தமாஷும் தான். இந்த மாதிரி ஜோடியை வேறெங்கும் காணமுடியாது.

மங்களம்.

Printed at Jayachandra Press, 24/27, Mukker Nallamuthu Stree, Madras.

ஓடியன்

பக்த துகாராம்

டிராமா ஸெட்டைக்

கேட்டீர்களா?

●

4 ரிகார்டு ஸெட்

வித்வான் M. ராஜகோபால சர்மா

— துகாராம் —

சுசிந்தரம் S. D. சுப்பய்யா

-- மகா விஷ்ணு —

M. P. தேவநாயகி

கமலா (துகாராம் மனைவி)

●

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மதராஸ்.

RATNAVALI
DISTRIBUTORS—
SARASWATHI
STORES ———
MADRAS———